நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.
**முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B(Hons)., L.L.M.,**
நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.
2026 ம் ஆண்டு ஜீன் மாதம் 06 ம் நாள் சனிக்கிழமை
**குற்றவியல் பல்வகை மனு.401/2026**

மு.சின்னபொன்னு,
க/பெ.முருகன், ... மனுதாரர்/ புகார்தாரர்

/எதிரிடை/

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்
திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய
குற்ற எண்.214/2026 ... எதிர்மனுதாரர் / குற்றமுறையீட்டாளர்

இம்மனு கடந்த 18.05.2026 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு 21.05.2026 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 06.06.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.மார்ட்டின்பிரதீபன், B.A, B.L, அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் கற்றறிருந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 திரு.P.பெத்துரதி, MBA., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் பா.நி.சு.ச பிரிவு 497 மற்றும் 503 ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் வழக்கு சொத்துக்களுக்கு பி.ஆர்.எண்.256/2026–ல் உள்ள வழக்கு சொத்தை மனுதாரர் வசம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் மனுவின் சுருக்கம்–**

இவ்வழக்கின் மனுதாரர் / புகார்தாரர் என்றும், தான் கடந்த 24.04.2026 ம் தேதி அதிகாலை 04.45 மணியளவில் சிவகாசி ரோடு, மிலிட்டரி கேண்டீன் நடந்து சென்று கொண்டிருக்கும் போது ெஹல்மெட் அணிந்து கொண்டு இருசக்கர வாகனத்தில் வந்த நபர் தனது கழுத்தில் அணிந்திருந்த சுமார் 2 கிராம் சிலுவை டாலருடன் இருந்த 3 பவுன் தங்க தாலிச் செயினை பறித்துவிட்டு வேகமாக சென்றுவிட்டார் என்றும், மேற்படி சம்பவத்திற்கு நடிக்கை எடுக்கும்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அன்படி தனது தங்கச் செயினை பறித்து சென்ற நபரை கைது செய்து அவரிடமிருந்து கைப்பற்றிய சுமார் 12.480 கிராம் எடையுள்ள பெரிய தங்கக்கட்டி ஒன்று மற்றும் 740 மில்லி கிராம் எடையுள்ள சிறிய தங்கக்கட்டி ஒன்று காவல் நிலைய பாதுகாப்பில் உள்ளது என்றும், மேற்படி தனக்கு

சொந்தமான சுமார் 2 கிராம் சிலுவை டாலருடன் இருந்த 3 பவுன் தங்க தாலிச் செயினை பறித்து சென்ற நபரிடமிருந்து எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் கைப்பற்றி சுமார் 12.480 கிராம் எடையுள்ள பெரிய தங்கக்கட்டி ஒன்று மற்றும் சுமார் 740 மில்லி கிராம் எடையுள்ள சிறிய தங்கக்கட்டி ஒன்று ஆகியவற்றை தன்னிடம் வழங்க உத்தரவிட வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது என்றும், மேற்படி நகையை தன்னிடம் ஒப்படைக்காத பட்சத்தில் தனக்கு ஏராளமாக கஷ்ட நஷ்டங்கள் ஏற்படக்கூடும் என்றும், மேற்படி நகையை தன்னிடம் ஒப்படைக்கும்பட்சத்தில் நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுபட தயாராக உள்ளதாக கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>3. அரசு தரப்பு எதிருரையின் சுருக்கம்</u>

அரசு தரப்பில் எதிர்மனுதாரர் தரப்பில் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வழக்கின் சொத்தை மனுதாரரிடம் திரும்ப கொடுக்கும்பட்சத்தில் மனுதாரர் நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகாமல் வெளியூர் சென்றுவிடுவார்கள் என்பதாலும், நீதிமன்ற கோரும்பட்சத்தில் ஆவணங்களை ஆஜர் செய்ய மாட்டார் என்பதாலும், கைப்பற்றப்பட்ட சொத்தை மனுதாரரிடம் கொடுத்தால் அதனை அவர் விற்பனை செய்யவும், உருமாற்றம் செய்யவும், அடமானம் வைக்கவும் நீதிமன்ற விசாரணையின் போது ஆஜர்படுத்தாமல் இருக்கவும் வாய்ப்பு உள்ளது என்று கூறி ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

4. மனுதாரர் தரப்பில், மனுதாரரின் ஆவணமான ஆதார் அடையாள அட்டை நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. தற்போது நீதிமன்றத்தின் முன்பு எழுந்துள்ள வினா மேற்படியான மனுவை அனுமதிப்பதா வேண்டாமா என்பதே ஆகும்.

. 6. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கு சொத்தான 12.480 கிராம் எடையுள்ள பெரிய தங்கக்கட்டி ஒன்று மற்றும் சுமார் 740 மில்லி கிராம் எடையுள்ள சிறிய தங்கக்கட்டி ஆகியவை குற்றமுறையீட்டாளரால் எதிரியிடம் கைப்பற்றப்பட்டுள்ள நகையை மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்க வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு சொத்துக்கு இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு மேற்படி வழக்கு சொத்துக்கு R.No.256/2026 என வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு சொத்தினை நகை மதிப்பீட்டாளர் மூலம் மதிப்பீடு செய்து எடை போட்டு பார்த்த போது 12.420 கிராம் மற்றும்730 மில்லி இருந்தது. மேலும் இவ்வழக்கானது மனுதாரர் கொடுத்த புகாரின் அடிப்படையிலேயே வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் மேற்படி வழக்கு சொத்தான உருக்கிய நிலையில் உள்ள தங்க கட்டியை மனுதாரர் வசம் ஒப்படைக்கப்பட்டால்

நகையை உருமாற்றம் செய்யப்படவோ, விற்பனை செய்யப்படவோ வாய்ப்பு உள்ளது என்றும், வழக்கு விசாரணையின் போது மேற்படி நகையை ஆஜர் செய்யப்படாமல் போகும் நிலைக்கு தள்ளப்படும் வாய்ப்பு உள்ளது என்றும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. அரசு தரப்பில் வழக்கு சொத்தாக கைப்பற்றப்பட்டுள்ள நகைக்கு மனுதாரர் தான் உரிமையாளர் என்பது குறித்து ஆட்சேபனை தெரிவிக்கப்படவில்லை. மனுதாரர் அவரது மனுவுடன் தாக்கல் செய்துள்ள உறுதிக்கூற்றில் வழக்கு சொத்தை நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஆஜர்படுத்துவதாக உறுதி கூறியுள்ளார். வழக்கு சொத்தை உபயோகப்படுத்தப்படாமல் இருந்தால் அதன் பயன்பாடு குறைந்து விட வாய்ப்பும் உள்ளது. மேலும் மாண்பமை உச்ச நீதிமன்றம் சுந்தர்பாய் அம்பாலால் தேசாய் –எதிர்– குஜராத் மாநிலம் 2002 (10) SCC 283 என்ற வழக்கில் சொல்லியுள்ள கோட்பாட்டினை கருத்திற் கொண்டும், கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மேற்படி வழக்கு சொத்தான 26.02 கிராம் எடையுள்ள தங்க கட்டியை அதன் உரிமையாளரான மனுதாரரிடம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைப்பு செய்ய உத்தரவிடப்படுகிறது.

1. வழக்கு சொத்துக்கு ஈடாக மனுதாரரும், இரண்டு ஜாமீன்தாரர்களும் தலா ரூ.1,20,000/–க்கு பிணை பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

2.வழக்கு சொத்தை முழுமையாக காட்டக்கூடிய அனைத்து பரிமானங்களிலிருந்தும் எடுக்கப்பட்ட புகைப்படத்தை தாக்கல் செய்ய வேண்டும். அதற்கான பாரதிய சாக்சய அதினியம் பிரிவு 63–ன் கீழான சான்றிதழை தாக்கல் செய்யவேண்டும்.

3. அசல் வழக்கு முடியும் வரை வழக்கு சொத்தை விற்பனை செய்யவோ, அடமானம் வைக்கவோ, வேறு வில்லங்க விவகாரத்தில் ஈடுபடுத்தவோ கூடாது.

4. வழக்கு விசாரணையின் போது வழக்கு சொத்தை ஆஜர்படுத்த வேண்டும்.

5. வழக்கு சொத்துக்கு பஞ்சநாமா தயார் செய்து தாக்கல் செய்யப்பட வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆண்டு ஜீன் திங்கள் 06 ம் நாளாகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

-Sd/-Ms.T.Subashini-
நீதித்துறை நடுவர் எண் 2,
திருவில்லபுத்தூர்